DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வெள்ளிகிழமை 14ம் நாள் சாட்சியாகிய கீதாலட்சுமி குமார் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. சாந்தி, தலைமை எழுத்தர் , என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கீதாலட்சுமி | வயது | 67 |
| க/பெ. | ஆதிகேசவலு | இனம் | பெண் |
| கிராமம் | வடமாம்பாக்கம் | தொழில் | இல்லத்தரசி |
| சமயம் | | தாலூக்கா | |

**M.C.9/2023**

(எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை.எதிர்மனுதாரர் சார்பாக குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர். )

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி எதிர்மனுதாரர் தரப்பில் 14.02.2025 ம.சா.2</u>**

1. மார்ச் 2021ம் மாதம் எனது மகள் போன் செய்து தாம்பத்தியம் ஏதுவும் நடைபெறவில்லை என்று சொன்னவுடன் நான் எதிர்மனுதாரர் வீட்டிற்கு சென்று அழைத்து வந்து விட்டேனா என்றால் எதிர்மனுதாரர் செய்த கொடுமை காரணமாக எனது மகளை அழைத்து வந்து விட்டேன்.

2. எதிர்மனுதாரரின் உறவினர்கள் எனது வீட்டிற்கு சமாதானம் பேச வந்தார்களா என்றால் ஏப்ரல் மாதம் வந்தார்கள். நான் தனிக்குடித்தனம் வைத்தால் தான் எனது மகளை சேர்த்து வைப்பேன் என்று பஞ்சாயத்தாரிடம் தெரிவித்தேனா என்றால் இல்லை. நான் பெங்களூரில் தனிக்குடித்தனம் வைத்தால் தான் எனது மகளை அனுப்புவேன் என்று தெரிவித்தேன் என்றால் இல்லை.

3. நான் எனது மகளை சேர்த்து வைப்பதற்கு முயற்சி எடுத்தேனா என்றால் எனது மகளை கொடுமை செய்யததால் நான் சேர்த்து வைக்க முயற்சி எதுவும் செய்யவில்லை. எனது மகள் என்ன படித்துள்ளார் என்றால் பொறியியல் முதுகலை பட்டப்படிப்பு படித்துள்ளார். எங்களுக்கு அரக்கோணத்தில் சொந்தமாக எத்தனை வீடு உள்ளது

என்றால் 1 ஒரு வீடு உள்ளது. எங்களுக்கு திருத்தணியில் சொத்துக்கள் உள்ளது என்றால் இல்லை.

4. மனுதாரருக்கு முதல் திருமணம் விவாகரத்தின் போது எவ்வளவு இழப்பீடு வாங்கினோம் என்றால் எனக்கு தெரியாது. மனுவில் ரூபாய்.26,00,000/- பணம் வாங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் திருமண செலவை வாங்கினோம். அந்த ரூபாய்.26,00,000/-கொண்டு திருத்தணியில் மனுதாரர் பெயரில் இடம் வாங்கியுள்ளேன் என்றால் எனது அம்மா வீட்டில் இருந்து எனக்கு கிடைத்த தொகையில் வாங்கியுள்ளோம்.

5. நான் இழப்பீடு தொகை கொண்டு தான் திருத்தணியில் இடம் வாங்கினோம் என்றால் சரியல்ல. எனது கணவர் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் திருத்தணியில் அம்மன் அருள் ஆட்டோ பைனாஸ் மற்றும் கன்சல்டன்சி தொழில் செய்து வருகிறார். எனது மனுதாரரும் சேர்ந்து தொழிலை செய்து வருகிறார் என்றால் இல்லை. மனுதாரர், எனது கணவருடன் சேர்ந்து தொழில் செய்து மாதம் ரூபாய்.2,50,000/- வருமானம் ஈட்டி வருகிறார் என்றால் இல்லை.

6. எனது மகள் வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. எனது மகள் அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது மகளுக்கு தான் தெரியும். நான் தாம்பத்தியம் நடைபெறவில்லை என்பதற்கு எதிர்மனுதாரரரை மருத்துவரிடம் பரிசோதனை செய்தேனா என்றால் இல்லை.

7. எனது மகளுக்கு சொரியசிஸ், குரோனிக் சிக்னஸ் வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் இல்லை. பணம் பறிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் மனுதாரர் தாக்கல் செய்த வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் ஆண்மை தன்மையுடன் உள்ளார் என்றாலும், தாம்பத்தியமும் மனுதாரருடன் ஏற்பட்டது என்றால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. மனுதாரருக்கு அவரை பராமரித்துக்கொள்ள வசதியுள்ளது என்றாலும், எதிர்மனுதாரர் பராமரிக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. முதல் திருமணத்தில் பணம் பெற்றது போல் எதிர்மனுதாரரிடம் பணம் பறிக்க இந்த மனு

தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது மகளுக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.
Sd/–(K.Ramkumar.M.L.)
Judicial Magistrate No.I,
Arakkonam.